Colombagam
1964 50 Years 2014
Golden Jubilee
Thuraiyappah Vidyalayam

# பொன்விழா மலர்

(1964 – 2014)

## யா / கொழும்புத்துறை
## துரையப்பா வித்தியாலயம்




Celebrating
*fifty* years...

20.10.2014

# யா/ கொழும்புத்துறை
# துரையப்பா வித்தியாலயம்

# பொன்விழா மலர்

1964- 2014

**20.10.2014**

# யா/ கொழும்புத்துறை துரையப்பா வித்தியாலயம்
# பொன்விழா மலர்

மலர்க்குழு : திருமதி க.ஜெயராஜபாலா
திருமதி த.பேரின்பமூர்த்தி
திரு.ந.தயாளன்
திருமதி நா.சுகிர்தலிங்கம்
திரு. பா.சண்முகானந்தன்
திருமதி. ம.இராஜேஸ்வரன்

வெளியீடு : யா/ கொழும்புத்துறை துரையப்பா வித்தியாலயம்

ஆண்டு : 2014

பக்க வடிவமைப்பு,
பதிப்பு : மெகா பதிப்பகம்
101, கண்டி வீதி, கச்சேரியடி,
யாழ்ப்பாணம்.

பக்கங்கள் : xix + 68

# கைத்தொழிலை ஓரிடப்படுத்தும் காரணிகள் என்ற வகையில் மூலப்பொருள், போக்குவரத்து மற்றும் அரசியல் காரணிகளின் முக்கியத்துவம் : தெரிவு செய்யப்பட்ட சில நாடுகளை சிறப்பாகக் கொண்ட ஓர் பார்வை.

**Mr.S.SUthayaKumar B.A (Hons),**
M.A, M.Phil (Econ). (Jaff)
Senior Lecturer,
Department of Economics,
University of Jaffna

## அறிமுகம்

நிலத்தின் மேற்பரப்பிலும் நிலத்தின் கீழும் வருவாய் பெற்றுத் தரும் மனிதனின் அறிவுத் திறமையின் எடுத்துக்காட்டாகக் கைத்தொழில்கள் அமைந்துள்ளன. உலகின் பெரும்பாலான மக்கள் இன்று தமது உணவு, உடை, உறையுள், போக்குவரத்துச் சாதனங்கள் போன்ற யாவற்றிற்கும் கைத்தொழில் உற்பத்திப் பொருட்களிலேயே தங்கி உள்ளனர். பயிர்ச்செய்கையில் தங்கியிருக்கும் நாடுகள் எல்லாம் இன்று கைத்தொழில்களில் கூடிய கவனம் எடுத்து வருகின்றன. அதற்குக் காரணம் அதிக மக்களுக்கு வேலை வாய்ப்பு வழங்குவதும் பொருளாதாரத்தில் மேம்பாடு அடைதலு மாகும். நவீன கைத்தொழிலில் முன்னேறி யுள்ள நாடுகளே பொருளாதார பலம் வாய்நத நாடுகளாகவும் சக்தி வாய்ந்த வல்லரசுக ளாகவும் விளங்குகின்றன. இந்த வகையில் முக்கியத்துவம் பெறும் இத்தகைய கைத்தொழிலை ஓரிடப்படுத்துவதில் பல காரணிகள் தங்கியுள்ளன. இக்காரணிகளின் தன்மையைப் பொறுத்தே கைத்தொழில் இடவமைவானது தீர்மானிக்கப்படுகின்றது. குறிப்பிட்ட ஓர் இடத்தில் குறிப்பிட்ட ஒரு கைத்தொழிலை ஆரம்பிப்பதற்குப் பல்வேறு காரணிகள் துணை நிற்க வேண்டும். இந்தவகையில், மூலப்பொருட்கள், வலு, தொழிலாளர் வசதி, நீர் வளம், சந்தை வசதிகள், போக்குவரத்து வசதிகள், அரசியல் காரணிகள் போன்ற பல காரணிகள் கைத்தொழிலை ஓரிடப்படுத்தும் முக்கிய காரணிகளாக விளங்குகின்றன. இவற்றில் மூலப்பொருட்கள், போக்குவரத்து, அரசியல் காரணி என்பன பற்றி விரிவாக நோக்குவோம்.

நவீன கைத்தொழில்களின் வளர்ச்சியில் முதல் நிலை குடிசைக் கைத்தொழிலிலேயே ஆரம்பமாகிறது. இன்றும் பல நாட்டு மக்கள் குடிசைக் கைத்தொழில்களையே செய்து வருகின்றனர். உள்நாட்டு மூலப்பொருட்களை அடிப்படையாகக் கொண்டு மனிதவலுவின் உதவியுடன் வீட்டிலிருந்து தமது தேவைக்காக அல்லது பல குடும்பங்களின் தேவைக்காக செய்யப்படும் உற்பத்தியாக்கமே குடிசைக் கைத்தொழிலாகும். குடிசைக் கைத் தொழிலின் படிப்படியான வளர்ச்சியாக வேலைத்தளக் கைத்தொழில் அமைவதுடன் இக்கைத்தொழிலின் படிப்படியான வளர்ச்சியே

நவீன தொழிற்சாலைக் கைத்தொழிலாகும். உலகின் கைத்தொழில் உற்பத்திப் பொருட்களுக்கு இருந்த தேவையை நவீன தொழிற்சாலைக் கைத்தொழில்களே பூர்த்தி செய்யக்கூடியனவாக இருக்கின்றன.

கைத்தொழில் இடவமைவினைத் தீர்மானிப்பதில் பல்வேறு காரணிகள் முக்கியம் பெறுகின்றன. இதில் புவியியல் சார்ந்த காரணிகள், புவியியல் சாராத காரணிகள், பொருளியல் சார்ந்த காரணிகள், பொருளியல் சாராத காரணிகள், அரசியல் சார்ந்த காரணிகள் மற்றும் அரசியல் சாராத காரணிகள் என அவற்றைப் பட்டியல் படுத்தலாம். இத்தகைய காரணிகளாக தரையமைப்பு, மூலப்பொருட்கள், பொருளாதார பலம், மூலதனம், அரசின் நடவடிக்கைகள், முகாமைத்துவம் மற்றும் மானிடக் காரணிகள் போன்ற பல காரணிகள் முக்கியம் பெறுகின்றன.

கைத்தொழில் இடவமைவைத் தீர்மானிப்பதில் மூலப்பொருட்கள் முக்கிய இடத்தைப் பெறுகின்றன. முக்கியமாக மூலப்பொருட்களின் தன்மையைப் பொறுத்து கைத்தொழில் அமைவிடம் தீர்மானிக்கப் படுகின்றது. விவசாயம் சார்ந்த மூலப்பொருள், கனிய வளம் சார்ந்த மூலப்பொருள் அல்லது இடைநிலை மூலப்பொருள் என மூலப்பொருள்கள் காணப்படுகின்றன. சில சந்தர்ப்பங்களில் கைத்தொழில் அமைவிடம் மூலப்பொருள் சார்ந்து அமைகின்றது. ஆரம்ப காலங்களில் மூலப்பொருட்கள் உள்ள இடங்களிலேயே கைத்தொழில் இடவமைவு பெற்றது. கைத்தொழில் இடவமைவில் மூலப்பொருட்கள் மிக முக்கியமான ஒன்றெனக் கருதப்பட்டது.

## மூலப்பொருள் காரணிகள்

உலகளாவிய ரீதியில் கைத்தொழில் இட அமைவினை எடுத்து நோக்கும் போது மேற்கு ஐரோப்பாவின் கைத்தொழில் பிரதேசங்கள் நிலக்கரி வயல்களை அடிப்படையாகக் கொண்டு பெரிதும் அமைந்துள்ளன. மேலும் இப்பிரதேசங்கள் மூலப்பொருட்களை இறக்குமதி செய்தும் வருகின்றன. இன்று உலகிலேயே சிறந்த கைத்தொழில் நாடாக விளங்கும் ஐக்கிய அமெரிக்காவில் தரத்தில் உயர்ந்த நிலக்கரி, இரும்புத்தாது பல்வகையான மூலப் பொருட்கள், சிறந்த கொண்டு செல்லல் சாதனங்கள், போக்குவரத்து வசதிகள் என்பன ஒருங்கே சேர்ந்து காணப் படுகின்றமை குறிப்பிடத்தக்க சிறப்பம்சமாகும்.

உலகிலேயே மிகப் பெரிய இரும்புருக்கு மையமான பிறிஸ்பேக் ஐக்கிய அமெரிக்காவின் இரும்புருக்கில் ஐந்திலொரு பங்கினை உற்பத்தி செய்து வருகிறது. மூலப்பொருட்களை இலகுவில் பெறக்கூடிய சாதகமான ஓரிடத்தில் பிறிஸ்பேக் அமைந்துள்ளது. மலிவான தரமான நிலக்கரியைப் பெறக்கூடிய ஒரு நிலையம் பிறிஸ்பேக்கில் அமைந்திருப்பது போல வேறொரு நிலையத்திலும் அமையவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

ஐக்கிய அமெரிக்காவின் பேமிங்காம் இரும்புருக்குப் பிரதேசம், அப்பலாச்சியன் நிலக்கரி வயலின் தென் அந்தத்தில் அமைந்திருக்கின்றது. அதனால் நிலக்கரி இலகுவில் கைத்தொழில் மையத்தில் கிடைக்கின்றது. இரும்புத்தாதும் சுண்ணாம் புக்கல்லும் அருகிலேயே கிடைக்கின்றன. எனவே கைத்தொழிற்சாலைகள் மூலப் பொருளை அடிப்படையாகக் கொண்டே இடவமைவு பெறுகின்றமை குறிப்பிடத்தக்கது.

இரும்புருக்கு தொழிலில் பிரித்தானி யாவும் முக்கியம் பெற்று விளங்குகின்றது. வருடாவருடம் 212 கோடி தொன் இரும்புருக்கினை உற்பத்தி செய்து வருகிறது. நிலக்கரி போதியளவு கிடைப்பது,

இரும்புத்தாது கணிசமான அளவு இருந்தமை என்பன சாதகமான நிலைமைகளாகும். பிரித்தானியாவின் இரும்புருக்கு மையங்களாக ஸ்கொட்லாந்துப் பிரதேசம், வட கீழ் இங்கிலாந்துப் பிரதேசம், யோக்சயர் - நெற்றிங்காம் - டேபிப் பிரதேசம், லங்காசயர் பிரதேசம், மிட்லாந்துப் பிரதேசம், தென் வேல்ஸ் பிரதேசம் போன்றன விளங்குகின்றன.

இந்த இரும்புருக்கு மையங்கள் யாவும் நிலக்கரி வயல்களை ஆதாரமாகக் கொண்டு அமைந்துள்ளன. ஸ்கொட்லாந்து தாழ்நில நிலக்கரி வயலில் ஸ்கொட்லாந்து இரும்புருக்கு மையங்களும், வட கீழ் பிரதேசத்தில் நியூகாசில் இரும்புருக்கு மையம், நொதம்பலாண்ட் - டேகாம் நிலக்கரி வயலில் அமைந்துள்ளது. யோக்சயர் நொற்றிங்காம் டேபி பிரதேசம் யோக்சயர் நிலக்கரி வயலிலும், மிற்லாந்துப் பிரதேசம் மிற்லாந்து நிலக்கரி வயலிலும் அமைந்துள்ளன. தென் வேல்ஸ் பிரதேசம் நிலக்கரி வயலிலேயே அமைந்துள்ளது.

இந்தியாவிலும் இரும்புருக்கு தொழிலானது சிறப்பாக இடம்பெறுகிறது. இரும்புருக்குத் தொழிலுக்கு வேண்டிய எரிபொருளான நிலக்கரி ஏராளமாகக் கிடைப்பது முதற்காரணமாகும். இந்தியாவின் வடகிழக்கில் தாமோதார் பள்ளத்தாக்கில் இந்தியாவின் பிரதான நிலக்கரி வயல்கள் அமைந்துள்ளன. யாரியா றனிகாஞ், பொக்களரோ, ஞர்சேலா, பிலாய் முதலிய இரும்புருக்குத் தொழிற்சாலைகள் வலை யங்களுக்கு அண்மையில் அமைந்துள்ளன. இரும்புருக்குத் தொழிலுக்குத் தேவையான இரும்புத்தாது இந்தியாவிலேயே கிடைக்கின்றது. தாமோதர் பள்ளத்தாக்கில் அமைந்துள்ள இரும்புருக்கு மையங்களுக்கு அண்மையில் தெற்கே மயூர்பஞ் மற்றும் சிங்பூம் இரும்புத்தாது வயல்கள் அமைந்துள்ளன.

பொறியியற் கைத்தொழிலில் என்று வரையறுக்கும் போது, கப்பல் கட்டும் தொழில், மோட்டார் வண்டித் தொழில், விமானம் கட்டும் தொழில், பொறிகள் அமைக்கும் தொழில், மின்னியக்க கைத்தொழில் என்பன அடங்குகின்றன. இக்கைத்தொழில்களும் மூலப்பொருட்களின் தாக்கத்தினாலேயே இடவமைவு பெற்றுள்ளன. கப்பல் கட்டும் தொழிலை நிர்ணயிக்கும் பிரதான காரணியாக அமைந்திருப்பது மூலப் பொருளான இரும்புருக்கு ஆகும். இரும்புருக்குத் தொழிற்சாலைக்கு அண்மையிலேயே கப்பல் கட்டும் கைத்தொழில் அமைந்துள்ளது. விமானம் கட்டும் தொழிலானது அத்தொழிலுக்குத் தேவையான அலுமினியம் கிடைக்கும் இடத்திலேயே இடவமைவு பெற்றுள்ளது.

பருத்தி நெசவுக் கைத்தொழிலின் இடவமைவினை மூலப்பொருளான பருத்தியே நிர்ணயிக்கின்றது. அதாவது பருத்தி நெசவாலை ஒன்று பருத்தி கிடைக்கின்ற பிரதேசங்களிலேயே அமைக் கப்படுகின்றது. ஐக்கிய இராச்சியத்தால் யோக்சேயர் பிரதேசம் கம்பளி நெசவில் முதன்மையானதாகும். இதற்கான கம்பளி பெனைன் மலைச்சாரரில் வளர்க்கப்படும் செம்மறியாடுகளிலிருந்து பெறப்படுகின்றது. இந்தியாவில் பம்பாய், அகமதாபாத் பகுதியில் இயந்திர நெசவுத் தொழில் பெருவிருத்தி பெற்றுள்ளது. இவை பருத்தி விளைவிக்கப் படும் மகராஷ்டிர எரிமலைக் கருமண் பிரதேசங்களுக்கு மிக அண்மையில் அமைந்துள்ளன.

இலங்கையில் கைத்தொழில் இட அமைவினை நோக்கும் போது பாரமான மூலப்பொருட்களை உபயோகிக்கும் கைத்தொழில் அம்மூலப்பொருள் கிடைக்கும் இடத்திலேயே அமைவு பெற்றது. இந்த

வகையில் காங்கேசன்துறை சீமெந்து தொழிற்சாலையை உதாரணமாகக் கூறலாம். மேலும் பாரம் இழுக்கக் கூடிய மூலப்பொருட்களைக் கொண்டு நடைபெறும் கைத்தொழில்கள் அனேகமாக அம் மூலப்பொருட்கள் காணப்படும் இடங்களி லேயே நிறுவப்பட்டன. இதற்கு ஹிங்குராணையில் உருவாக்கப்பட்ட சீனித் தொழிற்சாலையை உதாரணமாகக் கூறலாம். காய்ந்த கரும்பிலிருந்து கிடைக்கும் சீனியின் அளவு குறைவாகும். இதனால் கரும்பு வளர்க்கும் பகுதியிலேயே சீனித்தொழிற்சாலை உருவாக்கப்படுகின்றது.

எந்தவொரு உற்பத்திப் பொருளை யும் மூலப்பொருளின்றி உற்பத்தி செய்து விடமுடியாது. மூலப்பொருட்கள் கிடைக்கக் கூடிய இடங்களில் தான் கைத்தொழிற்சாலை களை அமைக்கமுடியும். அப்போது தான் உற்பத்திச் செலவு குறைவதுடன் மலிவாகச் சந்தைப்படுத்தவும் முடியும். உதாரணமாக, யாழ்ப்பாணக் குடாநாட்டில் சீமெந்துத் தொழிற்சாலை அமைந்தமைக்குக் காரணம் அங்கு சுண்ணாம்புக்கல் தாராளமாகக் கிடைக்கக்கூடியதாக இருப்பதனாலாகும். அதேபோல் பிற்ஸ்பேக்கில் இரும்புருக்குத் தொழில் நிலை பெறுவதற்கு அப்பிரதேசத்தில் இரும்புத்தாது இலகுவில் பெறக்கூடியதாகவும் நிலக்கரி அருகில் கிடைக்கக்கூடியதாகவும் இருப்பது காரணமாகும். பம்பாய் பிரதேசத்தில் பருத்தி நெசவு தொழில் சிறப்பாக அமைந்தமைக்கு காரணம் அதன் பின்னணி நிலத்தில் பருத்தி வேளாண்மை நடை பெறுவதாலாகும்.

எனவே பாரிய கைத்தொழில் களாயினும் சரி, சிறிய கைத்தொழில்களா யினும் சரி மூலப் பொருட்கள் இலகுவில் பெறக்கூடிய பிரதேசங்களில் அமைய முடியும். காங்கேசன்துறை சீமெந்துத் தொழிற்சாலை இலங்கையின் உன்னதமான ஒரு தொழிற்சாலையாகும். சீமெந்து உற்பத்திக்கு சில முக்கிய மூலப்பொருட்கள் தேவை. அவையாவன: சுண்ணக்கல், களிமண், ஜிப்சம் என்ற சிலாசத்து வனு என்பனவாகும். யாழ்ப்பாணக் குடாநாடு சுண்ணாம்புக்கற் பிரதேசமாகும். காங்கேசன் துறைப் பகுதியை அடுத்து சுண்ணக்கல் நிலத்தின் மேற்படையில் வெளியே அரும்பிக் காணப்படுகின்றது. அதனால் எளிதில் சுண்ணக்கல்லைப் பெறமுடிகிறது. காங்கேசன் துறையில் இத்தொழிற்சாலை அமைந்தமைக்கு காரணம் இங்கு சுண்ணக்கல் காணப்பட்டமையே ஆகும். தற்போது நாட்டு நிலைமை காரணமாக இத்தொழிற்சாலை இயங்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. புத்தளத்தில் பாலாவி என்னும் இடத்தில் புதிய சீமெந்து தொழிற்சாலை அமைந்துள்ளது. இத் தொழிற்சாலைக்குத் தேவையான சுண்ணக் கல், களிமண் என்பன இத்தொழிற்சாலைக்கு அண்மையிலேயே காணப்படுகின்றன. இவ்வாறு சீமெந்துத் தொழிற்சாலைகள், பிரதான மூலப் பொருளான சுண்ணக்கல் காணப்படும் இடங்களை அண்மித்தே இடஅமைவு பெற்றுக் காணப்படுகின்றன.

அடுத்து காகிதத் தொழிற்சாலை யினை நோக்கும் போது வாழைச்சேனையில் அமைந்துள்ளது. காகித தொழிற்சாலைக்குத் தேவையான வைக்கோலும் இலுக்புல்லும் தேவையான அளவு அந்தச் சுற்றாடலிலேயே கிடைக்கின்றன. இத்தொழிற்சாலைக்குத் தேவையான இலுக்புல் தொழிற்சாலை யிலிருந்து 15 மைல் தூரத்திலுள்ள புனானை என்ற இடத்தில் பயிரிடப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

அடுத்து சீனித் தொழிற்சாலையினை எடுத்து நோக்கினால் இலங்கையில் கல்லோயாவில் முதலாவது சீனித்தொழிற் சாலை அமைக்கப்பட்டது. இங்கு 10,000 ஏக்கர் பிரதேசத்தில் கரும்புச் செய்கை நடைபெறுகிறது. சீனித் தொழிற்சாலைக்கு

வேண்டிய மூலப்பொருளான கரும்பு அங்கு கிடைப்பதால் அதனை அடிப்படையாகக் கொண்டு இத்தொழிற்சாலை இட அமைவு பெற்றுள்ளது.

இரசாயனத் தொழிற்சாலை பரந்தனில் 1956 இல் உருவாக்கப்பட்டது. இதற்கு பிரதான மூலப்பொருள் உப்பு ஆகும். பரந்தனுக்கு அண்மையிலுள்ள ஆனையிறவிலிருந்து உப்பு கிடைக்கின்றது. காஸ்ரிக் சோடா, குளோரின் D.D.T. என்பன இத்தொழிற்சாலையில் உற்பத்தி செய்யப் பட்டது. நீண்டகாலம் நாட்டு நிலைமை காரணமாக இத்தொழிற்சாலை இயங்க வில்லை.

இரும்புருக்கு தொழிலை விருத்தி செய்யும் நோக்கமாக இலங்கை அரசாங்கத்தால் ஒருவெல என்ற இடத்தில் சோவியத் சமவுடமைக் குடியரசின் தொழினுட்ப உதவியுடன் இரும்புருக்கு தொழிற்சாலை உருவாக்கப்பட்டது. 307 ஏக்கர் நிலப்பரப்பில் இது அமைந்துள்ளது. இந்த ஆலைக்குத் தேவையான இரும்புத்தாதுப் படிவுகள் இவ்வாலையின் சுற்றாடலில் காணப்படுகின்றன. அதாவது தெலா, காகவத்தை, காலவானா, றக்குவாகனை, எகிலியக் கொடை, அம்பலாவ கொடை, அக்குறச தெனியாய, தம்பகண்டா ஆகிய பகுதிகளில் இரும்புத்தாதுப் படிவுகள் இருப்பது கண்டறியப்பட்டது.

மட்பாண்டத் தொழிற்சாலையினை நோக்கும்போது இங்கு பீங்கான் கோப்பைகள், மலசலக்கூடக் கோப்பைகள், மட்பாண்டங்கள் என்பன இலங்கையிலுள்ள மட்பாண்ட ஆலைகளிலேயே உற்பத்தி செய்யப்படுகின்றன. நீர்கொழும்பில் பிரதான மட்பாண்ட தொழிற்சாலை அமைந்துள்ளது. பிலியன்தல என்னுமிடத்தில் ஓர் ஆலையும் பொரவஸ்கமுவே என்னுமிடத்தில் வெண் களி துப்பரவாக்கும் ஆலையும் காணப்படுகின்றன. இந்த ஆலைக்குத் தேவையான வெண்களி, படிகம், களிக்கல் ஆகிய மூலப்பொருட்கள் இந்த ஆலைகளைச் சூழவே காணப்படுகின்றன. வெண்களி இலங்கையின் தென்மேல் கரையோரத்திலும், படிகம், களிக்கல் என்பன இரத்தினபுரி, எலகெரா என்னும் பகுதிகளிலும் ஏராளமாகக் கிடைக்கின்றன. இவ்வாறாக இந்த மட்பாண்டத் தொழிற்சாலைகளும் கூட மூலப்பொருட்களை அண்மித்தே இடவமைவு பெற்றுக்காணப்படுகின்றன.

இவ்வாறாகக் கைத்தொழிலினை ஓரிடப்படுத்துவதில் மூலப்பொருட்கள் முக்கியம் பெறுகின்றன. ஆரம்ப காலத்தில் கைத்தொழில்கள் யாவும் மூலப்பொருட்களை மையமாகக் கொண்டே இட அமைவு பெற்றன. மூலப்பொருட்கள் எங்கு உள்ளதோ அங்கு கைத்தொழிற்சாலைகள் அமைக்கப் பட்டன. ஆனால் இன்றைய நவீன போக்குவரத்து விருத்தி காரணமாகவும் நவீன தொழினுட்ப விருத்தி காரணமாகவும் கைத்தொழில் நிலையங்கள் மூலப் பொருட்கள் சார்ந்த இடங்களிலேயே அமைக்க வேண்டும் என்ற நிலைமை மாற்றங்கண்டுள்ளது.

கைத்தொழில்களை ஓரிடப்படுத்தும் காரணிகளில் மூலப்பொருட்களே ஒரு காலத்தில் முக்கியம் பெற்றிருந்தன. இன்றும் அவற்றின் முக்கியத்துவம் குறையவில்லை என்றாலும் கொண்டு செல்லல் சாதனங்க ளிலும் போக்குவரத்திலும் ஏற்பட்டிருக்கும் முன்னேற்றமானது மூலப்பொருட்களின் செல்வாக்கினை ஒரு சில பிரதேசங்களில் குன்றச் செய்துள்ளது. இவ்வகையில் கைத்தொழில்களை ஓரிடப்படுத்தும் காரணி என்ற வகையில் இன்று மூலப் பொருட்களின் முக்கியத்துவம் குன்றி வருகிற நிலை காணப்படுகின்றது.

### போக்குவரத்து காரணிகள்

அண்மைக்காலங்களில் ஏற்பட்ட நவீன தொழினுட்ப விருத்தி, போக்குவரத்து விருத்தி என்பன காரணமாக மூலப்பொருள் சார்ந்து அமைய வேண்டிய நிலை மாற்றமடைந்து வருகின்றது. போக்குவரத்தில் ஏற்பட்ட விருத்தி காரணமாக வலைப்பின்னல் போக்குவரத்து, தரை, கடல், ஆகாயம், குழாய், வழி, கால்வாய், வழிப்போக்குவரத்து என விரிவடைந்துள்ளன. அதுமட்டுமன்றி தொழினுட்பத்தில் ஏற்பட்ட விருத்தி காரணமாகப் போக்குவரத்தில் குளிர்சாதன வசதிகள் விருத்தி, தகவல் தொழினுட்ப விருத்தி, தொழில் நுணுக்கம் என்பன ஏற்படலாயின. இதனால் மூலப்பொருட்களை இலகுவிலும் விரைவாகவும் கொண்டு செல்லக்கூடியதாக உள்ளது. அந்தவகையில் போக்குவரத்து என்பது கைத்தொழிலை எவ்வகையில் ஓரிடப்படுத்துகின்றது என்பது பற்றி நோக்குவோம்.

யப்பான் ஒரு கைத்தொழில் நாடு ஆகும். இரும்புருக்குத் தொழில் அங்கு விருத்தி பெற்றுள்ளது. ஆனால் அந்த நாடு நிலக்கரியையும் இரும்புத் தாதையும் இறக்குமதி செய்தே தனது இரும்புருக்கு ஆலைகளை இயக்கி வருகிறது. யப்பான் பிலிப்பைன்ஸ் தீவுகள், மலாயா போன்ற பகுதிகளிலிருந்து இரும்புத்தாதினை இறக்குமதி செய்கின்றது. கழிவிரும்பு உலகில் சாதகமாக இல்லாத போதும் யப்பானில் இரும்புருக்கு கைத்தொழில் விருத்தியடைந்த மைக்குக் காரணம் சிறந்த கப்பல் போக்குவரத்து ஆகும். கப்பல் கட்டும் தொழிலிலும் முன்னேறியுள்ளதால் இரும்புத்தாது நிலக்கரி என்பவற்றை இறக்குமதி செய்வதில் யப்பானுக்கு சிரமமில்லை.

பெரிய பிரித்தானியாவில் நிலக்கரி இருக்கின்ற அளவிற்கு இரும்புத்தாது வளமில்லை. உலக உற்பத்தியில் 6% இரும்புத்தாதே பெரிய பிரித்தானியாவில் இருக்கின்றது. பிரித்தானியாவில் இருக்கின்ற இரும்புத்தாது போதாமையால் வெளி நாடுகளில் இருந்து இரும்புத்தாதை இறக்குமதி செய்கின்றது. போக்குவரத்து வசதிகள் விருத்தி பெற்றமையின் காரணமாக துறைமுகங்களுக்கு அருகில் தொழிற் சாலைகள் அமைந்துள்ளன. 90% ஆன இரும்புத்தாது சுவீடன், கனடா, வடஆபிரிக்கா போன்ற நாடுகளிலிருந்தே பிரித்தானியாவால் இறக்குமதி செய்யப் படுகின்றது.

உலகிலேயே சிறந்த கைத்தொழில் நாடாக விளங்கும் ஐக்கிய அமெரிக்காவில் சிறந்த கொண்டு செல்லல் சாதனங்கள் மற்றும் போக்குவரத்து வசதிகள் காணப்படுகின்றன. பிற்ஸ்பேக் நிலையத் துக்குத் தேவையான இரும்புத்தாது, 3000 கிலோமீற்றர்களுக்கு அப்பால் சுப்பீரியர் ஏரிக்கரையிலிருந்து பேரேரிகளூடாக மலிவாகக் கொண்டுவரப்படுகின்றது. பேரேரிக் கரையோர நகரங்கள் பல இரும்புருக்குக் தொழிலில் விருத்தி பெற்றுள்ளன. சிக்காக்கோ, டுலுத், ஈரி ஏரிப்பிரதேசம், ஒன்றாரியோ ஏரிப்பிரதேசம் என்பவற்றிற்றுக்குத் தேவையான இரும்புத்தாது மலிவாகவும் இலகுவாகவும் நீர் வழியாகப் பெற்றுக் கொள்ள முடிகிறது. அப்பலாச்சியன் பிரதேசத்திலிருந்து இரும்புப்பாதைகள் வழியாகத் தேவையான நிலக்கரியை தருவிக்க முடிகிறது. சிக்காக்கோவில் இரும்புப்பாதைகள் யாவும் குவிமையமாகச் சந்திக்கின்றன. இவை சிக்காக்கோவில் இரும்புருக்குத் தொழிலை நிலைபெற வைத்துள்ளன. சுப்பீரியர் ஏரியின் மேற்குக் கரையோரத்தில் இரும்புத்தாது வயல்களுக்கு மத்தியில் டுலுத் பிரதேசம் அமைந்துள்ளது. மொசாபி, கியூனா, வேமிலியன், மெனோமினி, முதலான

இரும்புத்தாது வயல்கள் டுலூத்தைச் சூழ்ந்து காணப்படுகின்றன. பிற்ஸ்பேக்கிற்கு இரும்புத்தாதை ஏற்றிச் செல்லும் கப்பல்கள் திரும்பி வரும் போது டுலூத்துக்குத் தேவையான நிலக்கரியை அப்பலாச்சியன் நிலக்கரி வயல்களிலிருந்து ஏற்றி வருகின்றன.

ஐக்கிய அமெரிக்காவின் மத்திய அத்திலாந்திக் பிரதேசங்களில் உள்ள பால்ரிமோர், பெத்தலகேம், பிலடெல்பியா ஆகிய கைத்தொழில் மையங்களால் அப்பலாச்சியன் நிலக்கரியைப் பெறுவதுடன், இரும்புத்தாதை லபிறடோர், வெனிசுவெலா, சில்லி ஆகிய நாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்படுகின்றன. கரையோர அமைவும் கப்பல் போக்குவரத்தும் சிறந்து அமைந்தமையே மூலப்பொருட்கள் இறக்குமதி செய்து இரும்புருக்கு உற்பத்தி செய்ய துணை புரிகின்றன.

கப்பல் கட்டும் தொழில் விருத்திபெற வேண்டுமாயின் துறைமுக வசதி கொண்ட கரையோரங்கள் அவசியமானதாகும். இக்கைத்தொழிலில் ஈடுபட்டுள்ள நாடுகள் கப்பல்கள் செல்லக்கூடிய உள்நாட்டு நீர் நிலைகளையும் துறை முகங்களையும் கொண்டிருக்க வேண்டும். இந்த இடங்களே கப்பல் கட்டும் தொழிலில் முதன்மை பெற்றுள்ளன. இதற்கு யப்பான் சிறந்த ஒரு உதாரணமாகும்.

விமானம் கட்டும் தொழில், அதற்குத் தேவைப்படும் மூலப்பொருளான அலுமினியம் கிடைக்கும் பகுதிகளில் ஆரம்பிக்கப்பட்டாலும் அலுமினியம் இலகுவில் கொண்டு வரக்கூடிய மூலப்பொருளாகக் காணப் படுவதால், இலகுவில் கொண்டு வரக்கூடிய பகுதிகளிலும் இத்தொழில் ஆரம்பிக்கப் பட்டுள்ளது. இதற்கு சிறந்த போக்குவரத்து முக்கிய பங்காற்றுகின்றது.

பெரிய பிரித்தானியாவிலுள்ள கைத்தொழில் பிரதேசங்களில் நெசவுக் கைத்தொழிலிற்குப் புகழ்பெற்ற பிரதேசமாக லங்காசயர் விளங்குகின்றது. லங்காசயர் ஆரம்பத்தில் கம்பளி நெசவுக்கைத்தொழிலில் ஈடுபட்டிருந்தாலும் பின்பே பருத்தி நெசவுக் கைத்தொழிலில் முக்கியம் பெற்றுள்ளது. ஏராளமாகப் பருத்திப்பஞ்சை சாம்ராச்சிய நாடுகளிலிருந்து இறக்குமதி செய்யக் கூடியதாக இருந்தது. லங்காசயர் கைத்தொழிற் பிரதேசம் ஆனது லிவர்ப்பூல், மான்செஸ்ரர், எனும் இரு நகரங்களைச் சூழ்ந்து அமைந்துள்ளது. லிவர்ப்பூல் நல்லதோர் துறைமுகமாதலால் மூலப் பொருட்களை இறக்குமதி செய்யப் பெரிதும் உதவியாக இருக்கின்றது. அதுமட்டுமன்றி மான்சென்ரர், நகரம் வரை பெரியதோர் கால்வாய் உள்ளது. மான்சென்ரர் கால்வாயூடாக மலிவான பருத்திப்பஞ்சினை மான்செஸ்ரர் தொழிற்சாலைகளுக்குக் கொண்டு செல்ல முடிகிறது. மூலப் பொருட்களைக் கொண்டு வருவதற்கும் உற்பத்திப் பொருட்களை சந்தைக்கு எடுத்துச் செல்வதற்கும் ஏற்ற கால்வாய்கள், இரும்புப் பாதைகள் வீதிகள், துறைமுகங்கள் என்பன இதற்குச் சாதகமாக அமைந்துள்ளது.

இந்தியாவில் ஏற்பட்ட போக்குவரத்து வளர்ச்சியால் பல பருத்தி நெசவாலைகள் அமைந்துள்ளன. பம்பாய், அகமதாபாத் ஆகிய பிரதேசங்களில் போக்குவரத்து விருத்தி காரணமாகவே நெசவாலைகள் உருவாக்கப் பட்டுள்ளன. இந்தியாவில் அகோலா, நாக்பூர், இந்துார், கோயம்புத்துார் சோலாப்பூர் பருத்தி நெசவாலைகள் போக்குவரத்துப் பாதைகளின் விருத்தியால் ஏற்பட்டுள்ளன.

இவ்வாறாக போக்குவரத்து பாதைகள் விருத்தியடைந்தமையால் பல முக்கியமான கைத்தொழிலில்கள் விருத்தி யடைந்துள்ளன. இலங்கையில், காலியில் சீமெந்துத் தொழிற்சாலை அமைந்துள்ளது. ஆனால் அங்கு மூலப்பொருள் இல்லை. மூலப்பொருள் காங்கேசன் துறையிலிருந்து

காலிக்கு கொண்டுசெல்லப்படுகின்றது. அதற்கு காங்கேசந்துறையிலிருந்து காலிக்கு நேரடியான புகையிரதப்பாதை அமைந்திருப்பதே காரணமாகும்.

**அரசியல் காரணிகள்**

கைத்தொழிற்சாலைகளை ஓரிடப்படுத்துவதில் அரசியல் காரணிகளும் முக்கியம் பெறுகின்றன. அரச தலையீடும், அரச கடன் கொடுப்பனவுகளும், அந்நிய நாட்டுத்தொடர்புகள், ஊக்குவிப்புக்கள், ஏற்றுமதி, இறக்குமதி, தொடர்பான சர்வதேச வர்த்தகத்தின் விருத்தி போன்ற பல காரணங்களும் கைத்தொழிலை ஓரிடப்படுத்துவதில் செல்வாக்குச் செலுத்துகின்றன. இதில் அரசியல் காரணி முக்கிய காரணியாகக் காணப்படுகின்றது. உற்பத்தியாளர்கள் கைத்தொழில் இடவமைவினைத் தீர்மானிப்பதில் முக்கிய பங்காளராக இருந்தபோதிலும் இதற்கு அப்பாற்பட்டும் அரசியல் காரணிகளும் ஒரு மறை ஊக்குவிப்பு அடிப்படையிலும் சில சந்தர்ப்பங்களில் தடைகளை ஏற்படுத்துகின்றன என்ற பின்னணியிலும் அரசியல் தலையீடுகள் கைத்தொழில் இடவமைவினைத் தீர்மானிப்பதில் முக்கிய பங்கினை வகிக்கின்றன.

ஆரம்ப காலங்களில் திட்டமிட்ட பொருளாதார நாடுகளான சீனா, சோவியத் ஒன்றியம், கியூபா போன்ற சோசலிச நாடுகளில் அரசாங்கங்களிடமே முழுப் பொறுப்பும் காணப்பட்டது. அரசின் நோக்கங்களுக்கு இணங்கவே கைத்தொழில் இடவமைவும் தீர்மானிக்கப்படுகின்றன. எனினும் சுதந்திரம் மற்றும் சனநாயக கலப்பு பொருளாதார நாடுகளில் அரசின் தலையீடு மிகக்குறைவாகவே காணப்படுகின்றது. அரசானது பிரதேச அபிவிருத்தி, வேலை வாய்ப்பு வழங்கல் மற்றும் நலிவடைந்த கைத்தொழில்களை மேம்பாடடையச் செய்தல் என்ற பின்னணியில் கைத்தொழில் இடவமைவைத் தீர்மானிப்பதில் குறிப்பிடத்தக்க செல்வாக்கைச் செலுத்துகின்றன. குறிப்பாக யப்பான் போன்ற நாடுகளில் இத்தகைய பண்புகள் காணப்படுகின்றன.

இலங்கையில் கூட திருகோணமலையில் சுதந்திர வர்த்தக வலயம் ஸ்தாபித்தல் தொடர்பாக 1970 களின் ஆரம்பத்தில் சுதந்திரக்கட்சி முன்மொழிந்த சிபார்சுகளை மாற்றி 1977 இல் மேல் மாகாணத்தில் கட்டுநாயக்காவில் ஸ்தாபிக்கப்பட்டமை காரணமாக இன்று இலங்கையின் கைத்தொழில் தொடர்பான செயற்பாடுகளில் மேல்மாகாணம் முன்னணி வகிக்கின்றது. தற்போது அரசியல் அதிகாரம் கொண்டவர்கள் தீர்மானம் எடுக்கக் கூடியவர்கள் தமது பிரதேசங்களில் (தெற்குப்பகுதிகளில்) கட்டுமாணப்பணிகளை முன்னெடுப்பதனூடாக இன்றும் எதிர் காலத்திலும் அரசியல் செல்வாக்கு உள்ள இடங்களில் தரமான கைத்தொழில்களும் மேம்பாடடைய வழிகோலும்.

இவ்வகையில் சில சந்தர்ப்பங்களில் மூலப்பொருள் மற்றும் போக்குவரத்துக் காரணிகளுக்கு அப்பால் அரசியல் இலாபம் கருதி தவறான இடங்களில் கூட கைத்தொழில் இடவமைவினைத் தீர்மானிக்கும் சந்தர்ப்பங்கள் கூட ஏற்படலாம். இந்த நிலைமை கைத்தொழில் தொடர்பான நிலைத்திருக்கும் அபிவிருத்திக்கு சவாலாக அமையலாம்.

* * * * *